09-06-2011

## தலைப்பு : இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி

**இத்தலைப்பில் ரஞ்சன் அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி;
மனிதகுலத்தின் இருப்பு என்பது அதன் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதிலேயே தங்கியுள்ளது. உழைப்பினைப் பயன்படுத்தி பொருள் உற்பத்தி இடம்பெறாமல், இயற்கையில் உள்ளவற்றினை மாற்றமின்றி நேரடியாக நுகர்ந்து மனிதஇனம் நிலைத்திருக்க முடியாது. எனவே பொருளுற்பத்தியே மனிதகுல இருப்பினை உறுதி செய்யும். உற்பத்திக்கு உழைப்பே கட்டாயமானது. உழைப்பாற்றலே மனிதனை மிருகங்களிலிருந்து வேறுபடுத்திதுகின்றது. மனிதஉழைப்புக்கு அறிவும் அதன் விருத்தியும் தேவைப்படுகின்றது. மேலும் உழைப்பே அறிவினை மேலும் மேலும விருத்தி செய்கினறது. அறிவு விருத்திக்கு கல்வி என்பது மிக முக்கியமானது. ஏலவே இருக்கின்ற, அதிகரித்துச் செல்லுகின்ற மனித தேவைகளை நிறைவுசெய்ய பொருளுற்பத்தியை அதிகரித்தலும் மேம்படுத்தலும் கட்டாயமானதாகும். இதற்கு அடிப்படையான உழைப்பு திறனை மேம்படுத்தவும், உற்பத்தி, வி;நியோகத்தினை இலகுபடுத்தும் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் கண்டுபிடிப்புக்கும் விருத்திக்கும் கல்வி முக்கியமானது.

இதற்குமேல் சமூகத்தில் புதிய பண்பாட்டு, கலாச்சார விருத்தியிலும் மனிதனின் சிந்தனை மற்றும்ஆளுமை விருத்தியிலும் கூட்டு உழைப்பும் பங்களிப்பும், கூட்டுப்பொறுப்பு மற்றும் ஜனநாயகப் பண்புகளை விருத்தி செயவதிலும் கல்வி செல்வாக்கு செலுத்துகின்றது.மேலும் தனிமனிதனொருவனின் சமூகம் சார்ந்த சிந்தனையிலும், தான்சார்ந்திருக்கின்ற வர்க்க, சமூக விடுதலை பற்றிய சிந்தனையிலும் அவனுக்கு அளிக்கப்படுகின்ற கல்வி செல்வாக்கு செலுத்துகின்றது. அரசுகளின் கல்விக்கொள்கை என்பது உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலேயே அமைகின்றது. அரசு யாருடைய நலன்களின் பதுகாவலனாக இருக்கின்றதோ, எந்த பெருளாதார கொள்கையைப் பிரதிபலிக்கின்றதோ அதனடிப்படையிலேயே தனது கல்விக்கொள்கையினை தீர்மானித்துக்கொள்ளும்.

வர்க்கமுரண்பாடு நிலவுகின்ற சமுதாயகட்டமைப்பில் அம்முரண்பாட்டினை பேணும் விதமாகவே கல்விக்கொள்கை அமையும். இங்கு ஒடுக்கப்படுவோருக்கு கல்வி மறுக்கப்படுவதனையும் அல்லது பாரபட்சம் காட்டப்படுவனையும் காணமுடியும். வர்க்க முரண்பாட்டின் உச்சக்கட்டத்தின் உருவாக்கங்களான சாதிய கட்டமைப்பு இன, சமய, பால்ரீதியான முரண்பாடுகள் காணப்படும் சமூகத்தில் ஒடுக்குதலுக்கு உள்ளானவர்ளுக்கு கல்வி மறுக்கப்படுவதனை அல்லது பாரபட்சம் காட்டப்படுவதனை இன்றும் காணமுடியும். முதலாளித்துவ கட்டமைப்பில் கல்விக்கொள்கையானது எப்போதும் தன்னால் மேய்க்கப்படககூடிய தொழிலாளர் படையொன்றினை உருவாக்குவதாகவே அமையும். இன்று முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்துள்ள நிலைமையில் அது மூன்றாம் உலக நாடுகளின் கல்விக்கொள்கைகளில் நேரடியாகவும், தனது செல்வாக்கு உட்பட்ட சர்வதேச நிறுவனங்கள் மூலம் மறைமுகமாகவும் தலையிகின்றன. எனவே இன்று ஏகாதிபத்திய பூகோலமயமாக்களின் பொறிக்குள் சிக்கிக்கொளும் எந்த தேசமும் தனக்கான சுயாதீனமான தேசிய கல்விக்கொளகையினை உருவாக்கிக் கொள்வது இயலுமானதல்ல.

இன்று இலங்கையில் காணப்படும் மேலைத்தேய கல்வி முறைமை நாட்டுக்கு போர்த்துக்கேயரின் வருகையுடனேயே அறிமுகமாகின்றது. தமது வியாபார நடவடிக்கைகளிற்கு ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள கத்தோலிக்க மதத்தினை பரப்ப முற்படுகின்றனர். இங்கு தமது மதத்திற்கு மாறியவர்களிற்கு சமய மற்றும் மொழி கல்வியினை வழங்கவேண்டிய தேவையின் காரணமாக கத்தோலிக்க மதபோதகர்கள் மூலம் கல்வியினை வழங்கினர். இவர்களிற்கு பின்வந்த ஒல்லாந்தர்களும் சமயக்கல்விக்கும் மொழிக்குமே முக்கியத்துவம் வழங்கினர். மேலும் தமது நிர்வாக சேவைகளில் இணைத்துக்கொள்ள ஒரு இடைநிலை வகுப்பினரினை உருவாக்கும் தேவையும் இவர்களுக்கு காணப்பட்டது.

ஒல்லாந்தர்களால் 15 வயது வரையிலானவர்கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி வழங்கப்பட்டது. எனினும் பாடசாலை அனுமதி பெறவேண்டுமாயின் கட்டாயமாக புரட்டஸ்டாந்து மதத்தினை பின்பற்ற வேண்டும் என்ற நிபந்தனையும் காணப்பட்டது. பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாதோர் தண்டப்பணம் செலுத்தவேண்டியிருந்தது. ஒல்லாந்தரின் கல்வி வழங்கும் செயற்பாட்டில் புரட்டஸ்தாந்த சபை மதகுருமாரின் முழுமையான ஆதிக்கம் காணப்பட்டது. அடிப்படையில் போர்த்துககேயரும் ஒல்லாந்தரும் கல்வி வழங்கியதன் அடிப்படை நோக்கம் தமது மதத்தினை பரப்புவதாகவும் தமது அரச அதிகாரத்தினை பாதுகாத்துக்கொள்வதாகவுமே இருந்தது. இக்காலப்பகுதியில் கல்வி வழங்கலில் சமயசார்பு என்பது வரையறையற்று காணப்பட்டது.

(மிகுதி பக்கம் 2 இல்)

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

16 - 06 -2011

பாலியல் தொழிற்துறையும் பெண்கள் மீதான சுரண்டலும்
- தேவசபா தனுஜன்

23 - 06 -2011

மதங்களின் தோற்றம்
- இதயராஜா

30 - 06 -2011

இலங்கைத் தமிழரிடையே "தற்கொலைகள்"
- நியூட்டன்



சே குவேரா அல்லது எல் சே என பொதுவாக அறியப்பட்ட எர்னெஸ்ற்றோ குவேரா டி லா சேர்னா (Ernesto Guevara de la Serna) (ஜூன் 14, 1928 - ஒக்டோபர் 9, 1967) அர்ஜென்டீனாவை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர், மருத்துவர், மார்க்சியவாதி, அரசியல்வாதி, கியூபா மற்றும் பல நாடுகளின் (கொங்கோ உட்பட) புரட்சிகளில் பங்குபற்றிய போராளி எனப் பல முகங்களைக்கொண்டவர்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**இலங்கையின் இன்றைய முறைசார் கல்வி**

*முன் பக்கத் தொடர்ச்சி..*

ஆங்கிலேயர் கி.பி 1798லிருந்து தேசம் சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் 1948.02.14 வரையில் இலங்கையின் கல்வியில் நேரடியான செலவாக்கினைக் கொண்டிருந்தனர். 1805ம் ஆண்டு முதல் மிசனரிகள் கல்வித்துறையில் செல்வாக்குடையவையாயின. கல்விவழங்களில் மதசார்பின்மை இருக்கக்கூடாது என்ற விதந்துரையினை ஆளுனர் மகனெனஸி 1840 காலப்பகுதியில் முன்வைத்தார். எனினும் மிசனரி அல்லது பங்கு பாடசாலைகளில் சமயச்சார்பு என்பது வலுவாகவே இருந்து வந்துள்ளது. தமது நிர்வாகச்சேவையில் உதவக்கூடிய வகையில் ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பொன்றினை தமது கல்விமுறையின் மூலம் உருவாக்குவதில் ஆங்கில ஆட்சி வெற்றி கண்டிருந்தது. இக்காலப்பகுதியில் ஆங்கில கிறிஸ்தவ பாடசாலைகளிற்கு போட்டியாக பௌத்த, இந்து பாடசாலைகளும் நிறுவப்பட்டன. இது கல்விவழங்களில் சமய அடிப்படையில் பாகுபாடும் போட்டியும் காணப்பட்டது என்பதற்கு வலுசேர்க்கின்றன.

1944ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இலவசக்கல்வி கட்டளைச் சட்டத்தில் மலையக மக்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பது கல்விவழங்கலில் முழுச்சமூகமொன்றே புறக்கணிக்கப்பட்டமைக்கு சான்றாகிறது. 1948ற்கு பின்னர் நாடு மறைமுகமாக காலனியாதிக்கத்தின் கீழேயே காணப்பட்டது. 1972 வரையில் ஆட்சிஅதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் தேசிய கல்விக் கொள்கையொன்றினை ஏற்படு;த்த முற்படவில்லை. ஆங்கிலக் கல்வி முறைமைக்கு பதில் சுதேச மொழிக் கல்வியினை உறுதிப்படுத்தவும் கல்விக்காக மதம்மாறுவதிலிருந்து சுதேச மக்களினை பாதுகாப்பதுவுமே நோக்கமாகவிருந்தது.

1972ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தேசிய கல்விக்கொள்கையொன்றினை ஏற்படுத்த முற்பட்டது. இங்கு பொதுக்கல்விக்கான வேலைத்திட்டமொன்று காணப்பட்டது. இது ஆரம்பக்கல்வியில் ஓரளவு மாற்றங்களினை கொண்டுவந்தது. எனினும் பின்னர் வந்த அரசாங்கமானது தேசியக்கல்வி கொள்கையிலிருந்து முற்றாக விலகிச்சென்றதுடன் அதன் எதிரக்;கணிய விளைவுகள் இன்றுவரையில் செல்வாக்கு செலுத்துகின்றன. சர்வதேச பாடசாலைகளினை இலங்;கைக்கு 1978ல் வந்த அரசாங்கமே அறிமுகம் செய்தது.

உயர்கல்வி என்பது மாணவர்களினை சுயமாக தேடி கற்பதனை தூண்டுவதாயும் ஆராய்ச்சி அபிவிருத்திக்கு உதவுவதாயும் அமைய வேண்டும் என்பது பொது அபிப்பிராயமாகும். ஆனால் இன்றைய பாடசாலை கல்வியும் உயர்கல்வியும் ஆரம்பத்தில் கூறப்பட்ட கல்வியினது நோக்கங்களுடன் எந்தளவு தூரம் விலகிச் சென்றுள்ளன என்பதுவும் மாணவர்களினை எதனை நோக்கி கொண்டு செல்கின்றன என்பது விவாதிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

இன்று பாடசாலைகள் மாகாண கல்வி அமைச்சின் கீழ் மாகாண பாடசாலைகள், மத்திய அமைச்சின் கீழ் தேசிய பாடசாலைகள் மற்றும் சர்வதேச தனியார் பாடசாலைகளும் காணப்படுகின்றன. இவற்றில் தேசிய, சர்வதேச பாடசாலைகளிலும் நகர்ப்புறங்களில் அல்லது அதற்கு அண்மித்த பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும் மத்திய மற்றும் உயர் மத்தியதர வர்க்கத்தின் ஆதிக்கம் நிலவுகின்றது. மேலும் பெரும்பாலான பாடசாலைகள் அரசியல் களங்களாக்கப்பட்டுள்ளமையையும் காணலாம். இவ்வகையான பாடசாலைகளில் செல்வாக்குடையவர்களின் பிள்ளைகளுக்கு சகலவிடயங்களிலும் முன்னுரிமையளிக்கப்படுகின்ற போக்கு உள்ளது. பாடசாலை வடிவங்கள் வேறுவேறாக பேணுவதன் நோக்கம் வகுப்பு நலன்களினை பேணுவதே. மாணவர்கள் அனைவரும் சமமானவர்கள் என்பது வெண்சீருடை மட்டிலேயே உள்ளது.

புதிதாய் அறிமுகப்படுத்தப்படவுள்ள பாடசாலைகளினை கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலை என தரப்படுத்தி சிரேஷ்ட பாடசாலையாக வலயமட்டத்தில் ஒரு பாடசாலையை மட்டும் நிறுவும் திட்டமும், பாடசாலை செயற்பாடுகளிற்கான செலவுகளை பாடசாலைகளே பொறுப்பேற்க வேண்டும் என்ற கொள்கையும் உலக வங்கியின் கட்டளைக்கமைய கொண்டுவரப்படவுள்ளன. உலக வங்கியின் கட்டளைக்கமைய அரசு கல்வி சுகாதாரம் போன்ற சமூகநலன் மீதான நிதியொதுக்கீட்டினை வேகமாக குறைத்து வருகின்றது.

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் பாடவிதானங்களினைப் பொறுத்தவரை அரசுக்கு பெருமளவான கடனை வழங்கும் உலக வங்கியின் கட்டளைக்கமைவாகவே வடிவமைக்கப்படுகின்றன. அவை வரலாற்று புனைவுகளை பாடங்களாக்கி இனவாத உணர்வினையும் மறைமுகமாக ஏற்படுத்துபவையாகவும் உள்ளன. பின்பற்றப்படும் கற்றல் கற்பித்தல் முறைமைகள் பின்தங்கிய வறிய பாடசாலைகளிற்கு அறவே பொறுத்தமற்றதாகவே காணப்படுகின்றன. வளப்பங்கீட்டில் பின்தங்கிய பாடசாலைகள் எப்போதுமே புறக்கணிக்கப்படுகின்றன்

மாணவர்களின் ஆளுமை விருத்தி, பண்முகத்திறன், தேடல் என்பவற்றினை இன்றைய கல்விமுறை இல்லாமல் செய்துள்ளதுடன் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதனை மட்டும் முன்னிலைப்படுத்தி மனனம் செய்து பரீட்சையில் ஒப்புவிக்கும் நிலைமையை தோற்றுவித்துள்ளது. ஆசிரியர் சொல்வது அனைத்தினையும் மாணவர்கள் கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற போக்கும் கற்றலுக்கான கற்பித்தலுக்கான தேடல் குறைவடையும் போக்கும் வளர்ச்சியடைகின்றது.

பாடசாலைக் கல்வியினையும் உயர் கல்வியினையும் நிறைவு செய்து வெளியேறும் மாணவர்கள் பூகோளமயமாக்கல் சூழலுக்கும் நுகர்வு கலாச்சாரத்திற்கும் ஏற்றவகையில் தயார் செய்யப்படுவதுடன் பெறும்பாலும் சேவைத்துறைகளில் மட்டும் வேலைசெய்ய பொறுத்தமானவர்களை உருவாக்குகின்றது. விவசாயம் முதல் கைத்தொழில் வரையிலான உற்பத்திகளில் ஈடுபடாமல் அவற்றில் பிறநாடுகளில் தங்கிநிற்கும் நிலைமையினை இது தோற்றுவிக்கின்றுது. இதற்கும் மேலாக ப+கோளமயமாக்கள், நுகர்வுக்கலாச்சாரம் என்பவற்றின் துணையுடன் இன்றைய கல்விமுறை அரசியல் பேச விரும்பாத பொதுநலச் சிந்தனையற்ற பெரும்பான்மையானோரை உருவாக்குவதில் வெற்றிகண்டுள்ளது.

மேலும் பாடசாலைகளினையும், உயர்கல்வி நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்தல் என்பன மேலும் விரைவாக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் அனுமதிக்கட்டணம் அறவிடக்கூடாது எனக்கூறப்பட்டாலும் அரசு அறியவே பலஆயிரங்கள், பத்தாயிரங்கள் அனுமதி;க்கட்டணமாக அறவிடப்படுகின்றன. கல்வி என்பது இன்று கொள்ளை இலாபம் தரும் தொழிலாக திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இப்போக்கு வறிய மக்களை கல்வி பெறும் உரிமையிலிருந்து தூர விலக்குவதுடன் விளைவில் வர்க்கவேறுபாட்டை நிலைநிறுத்தவும் பயன்படுகின்றது.

மேற்கூறப்பட்டவைகள் கடுமையான விமர்சனங்களிற்கு உட்படும் போது கண்துடைப்பாக அவை மீளப்பெறப்படலாம் அல்லது சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படலாம். எனினும் அவை எப்போதும் ஏகப்பெறும்பான்மையான மக்களுக்கு நன்மைகளைக் கொண்டுவரப்போவதில்லை. ஏனெனில் ஆளும் வர்க்கம் தனது நலன்களில் பெயரளவுக்குகூட விட்டுக்கொடுப்பினை மேற்கொள்ள தயாரானவையல்ல. நாடு ஏகாதிபத்திய பூகோளமயமாக்கல் பொறியிலிருந்து விடுபடும் வரையில் எமக்கான கல்வி என்பது சாத்தியமானதல்ல.

# பால்வினைத் தொழிலும் (பாலியல் வியாபாரம் / விபச்சாரம்) பெண்கள்மீதான சுரண்டலும்.

*16-06-2011 அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்*

***1.வாசல்வரை வந்துவிட்ட ஆபத்து -***

*இலங்கையின் இன்றைய பிரதானமான பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துள்ள பாலியல் வியாபாரம்.*

*வறுமை, விலைவாசி, வேலையின்மை, பாதள உலக தாதா அரசியல்.*
*கடந்தகால நீண்ட யுத்தம் உருவாக்கிவிட்ட நிலைமைகள்.*

*சுற்றுலாத்துறையின் வேகமான வளர்ச்சி. சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காகப் பலி கொடுக்கப்படும் சிறு பிஞ்சுகள், பெண்கள்.*

*சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், தொண்டர் நிறுவனங்களின் சட்டவிரோதச் செயற்பாடுகள். -*
*மத்திய கிழக்கு நோக்கிய பெண்களின் பெரும் படையெடுப்பு - ஆசிய மர்மம்*

***2.பாலியல் தொழிலா; பாலியல் வியாபாரமா? -*** *விபச்சாரத்தை ஒரு தொழிலாகக் கொள்ளலாமா?*

*கட்டாயப்படுத்தப்பட்டு, பல்வேறு நிர்ப்பந்தங்களால் பாலியல் தொழிலுக்குள் பெரும்பாலானவர்கள் தள்ளப்படுதல்.*

*சுய விருப்பின்பேரில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருத்தல்.*

*அடிமை முறையின் தொடர்ச்சியாகப் பாலியல் வியாபாரம் விளங்குகின்றமை.*

*வேறு தொழிலுக்கு மாறுவதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படல். மீட்சியின்மை.*

***3.உலகின் பாரம்பரியமான புராதன தொழிலின் இன்றைய நிலை.*** *- பாலியல் தொழிலின் வரலாறு.*

*கி.மு 18 ஆம் நூற்றாண்டில் பாலியல் வியாபாரம் சிறப்பான நிலையில் இருந்துள்ளமை.*

*மேற்கிலும் மத்திய கிழக்கிலும் மதங்களின் துணையுடன் இடம்பெற்றுள்ளமை.*

*இந்தியாவில் தேவதாசி முறை.*

*இன்றைய முதலாளித்துவ, உலகமயமாதலின் உறுதுணையுடன் பல்தேசியமயப்பட்டுள்ள பாலியல் வியாபாரம்.*
*சட்டரீதியான அங்கீகாரத்திற்கான போராட்டங்கள்.*

***4.வகைப்பாடுகளும், உலக அளவில் பெரும் வழர்ச்சியடைந்து வருகின்றமைக்கான காரணங்களும்.***

***5.பாலியல் வியாபாரத்தை நியாயப்படுத்த முடியுமா?***

*6.பெண்ணடிமைத்தனத்தின் உச்சக்கட்டமான வெளிப்பாடாக, பெண்கள் மீதான மன்னிக்க முடியாத சுரண்டலாகப் பாலியல் வியாபாரம்.*

*சமூகத்தின் அனைத்து மட்டங்களாலும் அச்சுறுத்தப்படுகின்ற, ஆதரவற்ற நிலை.*

*மனிதாபிமானமற்ற வகையில் இடம்பெறும் வாடகை, குத்தகை முறைமை. வன்முறையின் தாக்கம்.*

*இவர்களுக்கு வழங்கப்படும் வருமானத்தின் வீதம்.*

***7.தீர்வுகள் / தடுப்பதற்கான முன்னெடுப்புக்கள்.***
*உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டியவை.*
*நீண்டகால அடிப்படையில் நடைமுறைப்படுத்தவேண்டியவை.*

## வலை

**நமீபியாவின் விடுதலை எனும் நவீன அடிமை சாசனம்**

*மேற்குலக நாடுகளின் தயவில் கிடைக்கும் ஈழம், காலனிய சுரண்டலுக்கு வழி சமைக்கும் என்பதை நமீபியாவின் விடுதலை விளக்குகின்றது*

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/17

மூலம் : *http://kalaiy.blogspot.com/2011/06/blog-post_13.html*

**ஏழ்மை ஒழிப்பு புரட்சிக்காக நோபல் வாங்கியவன் கந்து வட்டிக்காரனாமே?**

*முகமது யுனுஸின் கிராமின் வங்கியால் கவரப்பட்டு, சர்வதேச அளவில் பல்வேறு வங்கிகளும் 'வறுமை ஒழிப்பில்' குதித்தன. நமது மகளிர் சுய உதவிக் குழுக்களின் ரிஷி மூலமும் இதுதான்.*

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/18

மூலம் : *http://www.vinavu.com/2011/06/16/grameen-bank/*

**"இலவசக் கல்வி நமது உரிமை" HRPC மாநாடு நேரடி ரிப்போர்ட்!**

*சட்டப்படி கல்வி நமது உரிமை, சமச்சீர் கல்வியின் அவசியம், தாய்மொழிக் கல்வியின் தேவை, தனியார் பள்ளிகளின் கொள்ளை, அரசின் பாராமுகம் என அனைத்து அம்சங்களும் விளக்கப் பட்டிருக்கிறது.*

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/19

மூலம் : *http://www.vinavu.com/2011/06/11/rte-hrpc/*


**இராணுவ முகாமில் நடத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சி எப்படியிருக்கிறது?**

*இராணுவ முகாம்களில் நடத்தப்பட்ட மாணவருக்கான தலைமைத்துவப் பயிற்சி பற்றி சிங்களத்தில் வெளியான கட்டுரையொன்றின் தமிழாக்கம்*

**முழுமையாகப் படிக்க:** valai.thulaa.net/20

மூலம் : *http://www.ndpfront.com/?p=21364*

## திரைப் படக்காட்சியும் கலந்துரையாடலும்




**சனிக்கிழமை, ஜூன்18**
4:30pm - 7:30pm

**தேசிய கலை இலக்கியப் பேரவை, வெள்ளவத்தை.**

**அனுமதி இலவசம்**

1994 **ஆம் ஆண்டு ருவாண்டாவில் இடம்பெற்ற பாரிய அளவிலான இனப்படுகொலை தொடர்பாகவும், அதன் பிரதிபலிப்பாக ருவாண்டா எதிர்நோக்கி வரும் விளைவுகள் குறித்தும் இந்த திரைப்படம் ஆராய்கின்றது.**

## கல்வி பற்றிய சில குறிப்புகள் -

மீநிலங்கோ

ஒடுக்கப்பட்டவர்களுக்கான கல்வி (Pedagogy of the Oppressed) என்ற கருத்தாக்கம் பிரேசில் நாட்டைச் சேர்ந்த போலோ பிரைரே (Paulo Freire) என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். அவர் தற்போதைய கல்வி முறையானது கற்பவர்களை கற்பிப்பவர்கள் அடிமை செய்கின்ற ஒரு கல்வி முறை என விளக்கினார். இன்றைய கல்வி முறையை வங்கிமுறைக் கல்வி என அறிவித்தார். அதாவது வங்கியில் பணத்தை சேமிப்பது போல மாணவர்கள் தலையில் தகவல்களை இட்டு நிரப்பும் வழிமுறையே இன்று நடைமுறையிலுள்ள கல்வி முறை எனக் கண்டார். தனது களஆய்வுகள் மற்றும் ஏனைய கற்பித்தல் அனுபங்கள் மூலம் பின்வரும் அவதானிப்புகளை வெளியிட்டார். அதன்படி:

1.ஆசிரியர் பாடம் நடத்துபவர்; மாணவர் நடத்தப்படுபவர்
2.ஆசிரியருக்கு எல்லாம் தெரியும்; மாணவருக்கு ஏதும் தெரியாது.
3.ஆசிரியர் சிந்திப்பார்; மாணவர்கள் சிந்திக்க வைக்கப்படுவார்கள்.
4.ஆசிரியர் பேசுவார்; மாணவர்கள் கவனிப்பார்கள்
5.ஆசிரியர் ஒழுக்கத்தைப் போதிப்பவர்; மாணவர்கள் நல்லொழுக்கம் அடைய வைக்கப்படுபவர்கள்.
6.ஆசிரியர் தனது முன்மொழிகளைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் கொண்டவர்; மாணவர்கள் அதை அப்படியே ஏற்க வேண்டும்.
7.திட்டத்தின் உள்ளடக்கத்தை, நிகழ்ச்சிப் போக்கை ஆசிரியர் தீர்மானிப்பார்; மாணவர்கள் அதற்கேற்ப தங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டும்.
8.ஆசிரியர்தான் செயல்படுவார்; ஆசிரியரின் செயல்பாடுகள் மூலம் தான் செயல்பட்டுவிட்டதாக மாணவர்கள்; தோற்றமயக்கம் அடைகிறார்கள்.
9.ஆசிரியர் என்பவர் தனது தொழில் அதிகாரத்தால் அறிவின் அதிகாரம் செலுத்தி அதை மாணவர்களின் சுதந்திரத்திற்கு எதிரான அதிகாரமாக முன்வைக்கிறார்கள்
10. கல்வி முறையின் மனிதக்கூறு ஆசிரியரே: அவர் மாணவர்களோடு பொருட் கூறுகளாய் சுருக்கம் பெறுகிறார்.

பிரைரேயைப் பொறுத்தவரை மானுட விடுதலையை முழு மனத்துடன் ஆதரிப்பவர்கள் வங்கி முறைக் கல்வியை முழுதுமாய்ப் புறக்கணிக்க வேண்டும். அதற்கு மாற்றாக மனிதர்களை உள்ளுணர்வு சார்ந்த உலகை ஒரு அங்கமாய்க் கருதி உணர்விணைடிப்படையில் சிந்திப்பவர்களாகக் கருதும் ஒரு கல்விமுறையைக் கண்டடைய வேண்டும். பொருள் சேமிப்பு போல அறிவுச் செய்தியைத் திணிக்கும் முறையைக் கைவிட்டு அதனிடத்தில் மனிதப் பிரச்சனைகளை முன் வைத்து விவாதித்து தங்களுக்கு அதிலுள்ள தொடர்பை உணர்ந்தறியும் ஒரு மாற்று வழியை அவர்கள் முன்வைக்க வேண்டும். பிரச்சனைகளை முன் வைக்கும் கல்வி, உள்ளுணர்வு சார்ந்த எதிர்வினை புரியும் ஒன்றாகி, மன விருப்போடு செயல்படுகிறபோது அதிகார அறிக்கை வாசிப்புகளாக இல்லாமல் உண்மையான தகவல் பரிமாற்றமாக ஆகிறது. இதுவே மானிட விடுதலைக்கான வழியாகும்.

பிரைரே இதனோடு இணைத்து இரண்டு கருத்தாக்கங்களில் கவனம் செலுத்துகிறார். ஒன்று 'மௌனப் பண்பாடு' (Silence Culture) மற்றும் 'பண்பாட்டு மௌனம்' (Culture of Silence) என்பனவாகும். இந்தக்கல்வி முறையிலிருந்து விடுபட தடையாக இருக்கும் காரணிகளான இவையிரண்டையும் காண்கிறார். மக்கள் உரையாடுவதன் மூலமும் விவாதிப்பதன் மூலமும் மட்டுமே இம் மௌனப் பண்பாட்டிலிருந்து விடுபட முடியும். இது நீண்டகாலப் போக்கில் பண்பாட்டு மௌனத்துக்கு முடிவுகட்டும்.

அவர் இன்றைய கல்விமுறையை நிலவுகின்ற உலக ஒழுங்கையும் ஆதிக்கத்தையும் தொடர்ச்சியாக நிறைவேற்றவும் பேணவும் உதவும் கருவியாகக் காண்கிறார். ஆசிரியர் மாணவரிடையோன புதிய உறவை போலோ பிரைரே தனது மாற்றுக் கல்வி முறையின் ஊடாக முன்மொழிகிறார். கல்வி முறையானது மனிதர்களைச் சுயமாகச் சிந்திக்கப் பழக்க வேண்டும். அதுவே ஒடுக்கப்பட்டவர்களின் கல்வியின் முறையிலிருந்து அவர்களை விடுவிக்க உதவும்.
உலகமயமாதல் என்பது முழு உலகையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையின் கீழான ஏகாதிபத்திய அணியின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருவது தான். அது வெறுமனே பொருளாதார ஆதிக்கம் மட்டுமல்ல. அதன் வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை நிரந்தரமாக்கும் நோக்குடன் மூன்றாமுலக நாடுகளையும் சுரண்டப்படும் உலக மக்கள் அனைவரையும் எல்லா வழிகளிலும் ஏகாதிபத்தியத்திற்குக் கீழ்ப்படியக் கூடியவர்களாக்கும் இலக்கையும் உள்ளடக்குகிறது. பண்பாட்டுச் சீரழிவும் சமூகங்களின் சிதைவும் அதற்கு உடன்படானவை. எனவே அது மூன்றாமுலக நாடுகளின் கல்வியை இலக்கு வைக்கிறது.

உலகமயமாக்கல் (கோளமயமாக்கல்) எவ்வாறு கல்வியை ஒரு பண்டமாக்கிக் கல்வியின் நோக்கத்தை அறிவு என்ற திசைகளிலிருந்து திருப்பி வெறுமனே ஏகாதிபத்திய, பெருமுதலாளியத் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கிலான திசையில் திருப்பப்படுகிறது. கல்வி தனது சமூகப் பரிமாணத்தை இழக்கிறது. அரசு கல்வியைத் தனது சமூகப் பொறுப்பாகக் கொள்ளாமல் தட்டிக்கழித்து அதை லாபநோக்கில் தொழில்சார் கல்வியை விற்பனை செய்கிற நிறுவனங்களின் கையில் ஒப்படைக்கிறது. இதனால் எவ்வாறு ஆசிரியர்களிடையும் மாணவர்களிடையும் கல்வி பற்றிய பார்வை விகாரமடைகிறது. கல்வி என்பது சுரண்டும் வர்க்க ஆட்சி தொடர்வதற்கான ஒரு கருவியாகி வருவதை அவதானிக்க முடியாமல் இல்லை, ஆரோக்கியமான சமூகப்பார்வையுடைய கல்வியின் பரவலாக்கமே மக்களை விடுவிக்கும்.

1960களின் நடுப்பகுதி வரையும், ஓரளவுக்கு 1970களின் முற்பகுதி வரையுங் கூட, நாட்டின் பின்தங்கிய சமூகங்கள், முன்னர் தங்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி வாய்ப்பைப் பெற்றன. ஆனால் 1965 முதல், வசதி படைத்த வர்க்கத்தினர் தமது மேலாண்மையை நிலைநாட்டும் வழிகளை உருவாக்கத் தொடங்கி விட்டனர். பாடசாலைக் கல்வியில் அரசாங்க முதலீடு போதாமையால் நாட்டின் பாடசாலைகளில் பத்துச் சதவீதத்திற்குங் குறைவானோர் கற்கும் வசதி படைத்த பாடசாலைகட்கும் ஏனைய வறிய பாடசாலைக்கும் இடையிலான ஏற்றத் தாழ்வு மேலும் விரிவடைந்தது. 1978க்குப் பிறகு அரசாங்கம் திட்டமிட்ட முறையில் இலவசக் கல்விக்குக் குழி பறித்துச் 'சர்வதேசப் பாடசாலைகள்' என்ற பேரில் தனியார் பாடசாலைகளை உருவாக்கியது. இப் பின்னணியில் பொருள் வசதி மிக்க பலர் தமது பிள்ளைகளைத் தனியார் பாடசாலைகளிலும் வெளிநாட்டிலும் கல்வி கற்க அனுப்பினர். அவர்களில் இன்னொரு பகுதியினரும் உயர் நடுத்தர வர்க்கத்தினரும் பேர் பெற்ற பாடசாலைகளில் தமது ஆதிக்கத்தை இறுக்கமாக்கிக் கொண்டனர்.

வசதிகளுடன் கூடிய புதிய பாடசாலைகளை உருவாக்குவதற்கும் பின்தங்கிய பாடசாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பதிலாக, நாட்டின் அரசாங்கங்கள் பிரபல பாடசாலைகளில் மாணவர் தொகையைக் கூட்டிக் கொண்டு போயின. இந்த விதமான அணுகுமுறையால் நகர் வாழ் நடுத்தர வர்க்கத்தின் வளர்ச்சியின் விளைவான தேவைகளை நிறைவு செய்ய இயலாமையே கடந்த சில ஆண்டுகளாகக் கல்வித் துறையில் ஊழலும் ஒழுங்கீனங்களும் பெருக வழி செய்தது. அரசாங்கமோ எதிர்க்கட்சியோ பெரிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களோ நாட்டின் மிகப் பெரும்பான்மையான குடும்பங்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்கிற நோக்கில் எதையும் செய்யவில்லை. இன்றைய விவாதம் நல்ல கனிகளைத் தமக்குள் பங்கிடுவதற்கு ஓரளவான வசதி படைத்தோரிடையிலான இடிபாடாகவே உள்ளது. அதில் ஏழைகள் பற்றியும் இலவசக் கல்வி பற்றியுமான கவலைகள் எல்லாம் வெறும் முதலைக் கண்ணீர் தான். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகளாக இலவசக் கல்வி அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் சிதைக்கப்பட்டு விட்டது. இந்த நாட்டுக்கென்று ஒரு கல்விக் கொள்கை பிரதான அரசியற் கட்சிகளில் எதனிடமும் இல்லை என்பதையும் கல்வி பற்றிப் பேசுகிற கனவான்களின் வங்கலோட்டுத் தனத்தையுமே நாம் இன்று காணுகிறோம். பல்கலைக்கழக அனுமதி ஒரு அரசியல் பிரச்சினை ஆக்கப்பட்டு நீதியற்ற தரப்படுத்தல் முறை ஒன்று புகுத்தப் பட்டதன் விளைவாகத் தேசிய இனப் பிரச்சினை மேலும் மோசமாகியது. அது நடந்து முப்பத்தேழு ஆண்டுகளின் பின்பு பாடசாலைகளின் முதலாம் வகுப்பு அனுமதியே ஒரு அரசியல் பிரச்சினை ஆக்கப்பட்டத்தை நாம் கண்டிருக்கிறோம். இவை நல்ல அறிகுறிகள் அல்ல. அதேவேளை மூன்றம் உலக நாடுகளில் காலனியாதிக்கம் விட்டுச் சென்ற கல்வி முறையே தொடர்கிறது. அதன் எச்சங்களில் இருந்து நான் என்னும் விடுபடவில்லை. இது பற்றி பல விரிவான கட்டுரைகளை வரலாற்றாசிரியர் இர்பான் ஹபீப் (Irfan Habib) எழுதியுள்ளார்.